<u>நீதித்துறை நடுவர் எண் 2 நீதிமன்றம், திருப்பத்தூர், வேலூர் மாவட்டம்.</u>

<u>சி.சி 135/2021</u>

**2022ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 23ம்** நாள் செவ்வாய்கிழமை அரசு தரப்பு சாட்சியாகிய **அ.சா. 3**வது நபரின் வாக்குமூலம், (1969ம் ஆண்டின் 54வது விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு. எஸ். பூபதி, உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிராமணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர | ஷகிலா | வயது: | 35 |
| த/பெ.(அ)க.பெ | தாமோதிரன் | தொழில்: | இல்லத்தரசி |
| ஊர் : | வாணியம்பாடி | சமயம்: | இந்து |
| வட்டம் : | திருப்பத்தூர் | சாதி: | |
| மாவட்டம : | திருப்பத்தூர் | | |

முதல் விசாரணை:

நான் வாணியம்பாடியில் வசிக்கிறேன். நான் இல்ல்த்தரசியாக உள்ளேன். அ.சா.1 எனது தங்கை. வழக்கின் எதிரி எனது தங்கையின் கணவர். 05.06.2017ந் தேதி அ.சா.1 எனது தங்கைக்கும், எதிரிக்குமிடையே பெரியோர்கள் ஏற்பாட்டின்படி திருமணம் நடைபெற்றது. திருமணம் முடிந்து சுமார் 1-1/2 ஆண்டுகள் நன்றாக வாழ்ந்து வந்தார்கள். என் தங்கைக்கு ஆண்குழந்தை பிறந்தது. திருமணம் முடிந்தது முதலே வரதட்சணை கேட்டு எதிரி என் தங்கையை கொடுமைப்படுத்தி வந்தார். அடிக்கடி பணம் கேட்டு தொல்லை கொடுத்து வந்தார். ரூபாய்.1,00,000/- வேண்டும் என்று சொன்னார். திருப்பத்தூர் அரசு மருத்துவமனையில் எனது தங்கைக்கு குழந்தை பிறந்தது. அன்றைய தினமே இரவு மருத்துவமனையில் எதிரி எனது தங்கையிடம் குழந்தைக்கு பால் கொடுக்க வேண்டாம், நான் மாட்டுபால் கொடுத்து வளர்த்துக்கொள்கிறேன் என்று கூறி சண்டையிட்டார். அதன்பிறகு சமாதானம் செய்து கணவர் வீட்டிற்கு அனுப்பி வைத்தோம். அடிக்கடி எதிரி எனது தங்கையை அடிப்பதாக எங்களுக்கு தகவல் சொல்லிவந்தார். குழந்தை பிறந்து 1-1/2 ஆண்டுகள் கழித்து எனது தங்கை பிரச்சனை அதிகமானதால் எங்கள் அம்மா வீட்டிற்கு வந்துவிட்டார். திருப்பத்தூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் எதிரி மீது புகார் அளித்தார். போலீஸார் சமாதானம் செய்து இருவரையும் மீண்டும் சேர்ந்து வாழ அனுப்பி வைத்தார்கள். ஆறு மாதம் ஒன்றாக வசித்து வந்தார்கள், அதன்பிறகு எதிரி எனது தங்கையை எங்கள் அம்மா வீட்டிற்கு கொண்டு வந்து விட்டுவிட்டார். அவர் மீண்டும் எனது தங்கையை வந்து அழைத்து செல்லாததால் நாங்கள் எதிரி வீட்டிற்கு சென்று இதுகுறித்து கேட்க சென்றோம். அப்போது வீட்டில் யாருமில்லை. அக்கம் பக்கம்

விசாரித்ததில் எதிரிக்கு போச்சம்பள்ளியை சேர்ந்த கந்தசாமி மகள் சுபாஷினி என்பவருடன் இரண்டவாது திருமணம் நடந்த விவரம் தெரிய வந்தது. எனவே, எனது தங்கைக்கு வேறு வழியில்லாமல் எதிரி மீது திருப்பத்துார் மகளிர் காவல் நிலையத்தில் புகார் அளித்தார். போலீஸார் என்னை விசாரித்தார்.

எ.த.கு.வி:-

எதிரி மனுவின் பேரில் ஆஜரில்லை. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டது. குறுக்கு விசாரணை செய்யப்படாமல் முடிக்கப்பட்டது.